# முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா 5.00

முரசு 46 ஒலி 4 பிரசோற்பத்தி தை 01 (15 · 01 · 1992) புதன்


## மன்னார்-பள்ளிமுனைக் கடலில் படையினர் சூட்டு; வியாபாரி பலி!

மன்னார்- பள்ளி முனைக் கடல் பகுதியில் படகு மூலம் வியாபாரம் செய்பவர்கள் மீது பள்ளிமுனையில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ரகு வியாபாரி ஒருவர் ஸ்தலத்தில் பலியானார்

இம்மாதம் 1ஆம் திகதி இரவு 8 மணியளவில் நடந்த இச்சம்பவத்தில் படகில் வந்த ஏனையோர் கடலில் குதித்து மயிரிழையில் நீந்தி தப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர் மன்னார் கள்ளியடியைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

04 ஆம் பக்கம் பார்க்க


முரசொலி
வர்ணக் கலண்டர்
இணைக்கப்பட்டுள்ளது
விநியோகத்தரிடம்
கேட்டு
வாங்குங்கள்


# யாழ். கரையோரப்பகுதி மக்கள் நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

## அரசாங்க அதிபரின் கால்களில் விழுந்து அழுதனர்

குருநகர், பாஷையூர், கொட்டடி, நாவாந்துறை, கொழும்புத்துறை, அராலி ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் தாம் படும் இன்னல்களை நீக்கக்கோரி நேற்று யாழ் நகர வீதிகளில் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தினர்.

பாடசாலை மாணவர்கள் பெண்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் இவ்வூர் வலத்தில் கலந்துகொண்டனர்,

குருநகர் சென்றோக் சன சமூக நிலையத்திலிருந்து ஆரம்பமான இவ்வூர்வலம்

—04 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்தின் கண்மூடித்தனமான ஷெல் வீச்சு

## மூளாய், சுழிபுரம் மக்கள் அரச அதிபருக்கு மகஜர் உலக அரங்கிற்கு அறிவிக்க வேண்டுகோள்

கடந்த சில தினங்களாக மூளாய், சுழிபுரம் பகுதிகளில் மக்கள் வாழும் குடிமனைகளை நோக்கி பலாலி, மண்டைதீவு இராணுவ முகாம்களிலிருந்து ஷெல் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன.

இதனால் உயிரழிவுகள், சொத்தழிவுகள் என்பனவற்றால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். இந்த அவலங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்க உடன் நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு நேற்று இப்பகுதிப் பொதுமக்களில் நூற்று

—04 ஆம் பக்கம் பார்க்க

## குருநகர் நோக்கி படையினர் கடும் ஷெல் தாக்குதல்

நேற்று அதிகாலை 12. 30 மணியிலிருந்து தொடர்ச்சியாக மண்டைதீவிலிருந்து படையினர் யாழ்ப்பாணக் கரையோரப் பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

படையினர் குருநகர் கடற்கரையோரப்பகுதியிலுள்ள குடிமனைகளை நோக்கியும் கொட்டடி, நவாந்துறை கடற்கரை குடிமனைகளை நோக்கியும் ஷெல் தாக்குதலினை மேற்கொண்டனர்.

இதனால் கட்டுமரங்கள், வாடிகள், பல வீடுகள் சேத

—04 ஆம் பக்கம் பார்க்க

## விசர்நாய்க் கடிக்குள்ளானவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்


பொங்கல் வாழ்த்து



இங்கு நம்மைச் சூழும் துன்ப இருள் விலகி
ஒளி வீசி மகிழ்ச்சி பொங்க
எங்குமே இன்பம் சூழ
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாசகர்கள்,
வாடிக்கையாளர்கள், விநியோக முகவர்கள்,
விளம்பரதாரர்கள் அனைவருக்கும்

முரசொலி

பொங்கல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறது.


## வவுனியாவில் 4படையினர்பலி

நேற்று முன்தினம் வவுனியாவில் விடுதலைப்புலிகள் வைத்த மிதிவெடிகளில் சிக்கி 4 இராணுவத்தினர் காலிழந்தனர்.

தாண்டிக்குளம், பேயாடிக்கூளான்குளம் பகுதிகளிலிருந்து படையினர் முன்னேற முயன்ற போதே இம்மிதிவெடிகளில் சிக்கியதாக தெரிவிக்கப்படுகிறது. 07

## வீரவணக்கம்

முல்லைத்தீவு முத்தையன்கட்டுக் குளத்தில் படகில் சென்ற போது விபத்தில் சிக்கி இரு போராளிகளான பரந்தாமன் (சி, புஷ்பராசா மாங்குளம்), சுகுணன் (தி. சதீஸ் முல்லைத்தீவு மரணமடைந்தனர்.

## மீனவருக்கு கடல் முத்திரை

குருநகர் பகுதி மக்களில் கடற்தொழிலை செய்யும் குடும்பங்களுக்கு நேற்று முதல் கடல் முத்திரைகள் வழங்கப் பட்டுவருகின்றன.

இப்பகுதியில் மீன்பிடித் தொழிலைச் செய்யும் மீனவர்கள் இராணுவ நடவ

—04 ஆம் பக்கம் பார்க்க

## காரைநகர் அதிரடித் தாக்குதல் கடற்படை விசாரணை!

## விசர்நாய்க் கடிக்குள்ளானவர்கள்
## அழைத்துச் செல்லப்பட்டனர்

யாழ் மாவட்டத்தில் விசர் நாய்க் கடிக்குள்ளானவர்களை ஓமந்தை வரையுமே செஞ்சிலுவைச் சங்கம் அழைத்துச் செல்லும் என நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

விசர்நாய்க் கடிக்குள்ளானவர்கள் நேற்று கொம்படி-ஊரியான் வரையும் செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் இரு தடவைகள் கொண்டு செல்லப்பட்டனர்,

அங்கிருந்து முகமாலை ஊடாக கிளிநொச்சி பகுதி செஞ்சிலுவைச்சங்க வாகனங்களில் ஓமந்தை வரையும் கொண்டு செல்லப்படுவார்கள்.

...04 ஆம் பக்கம் பார்க்க

### மாபெரும் கலை நிகழ்ச்சி

இன்று இரவு 7 மணிக்கு மாவீரர் அரங்கில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

விடுதலைப்புலிகள் கலை,

...04 ஆம் பக்கம் பார்க்க

### மூதூரில் இராணுவம் கெடுபிடி
## மக்கள் வெளியேறிய பகுதியில் முகாம் அமைக்கின்றனர்

மூதூரில் இராணுவத்தினரின் கெடுபிடியால் அப்பகுதியிலுள்ள பல கிராமங்களிலிருந்து தமிழ்மக்கள் வெளியேறியுள்ளனர்.

கடந்த இருவாரங்களாக மூதூரில் படையினரின் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள், சுற்றிவளைப்புகள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மக்களின் பல வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு பின்னர் படையினரால் தீக்கி

—04 ஆம் பக்கம் பார்க்க

## வங்காலைப்பகுதி அகதிகள் திரும்பிச் செல்ல மறுப்பு

மன்னார் - தாழ்வுபாட்டில் தங்கியுள்ள வங்காலை அகதிகளை தத்தமது பகுதிகளுக்கு செல்லுமாறும் தாம் பாதுகாப்பு வழங்குவதாகவும இராணுவத்தினர் சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்ததாக மன்னார்ச் செய்திகள் கூறுகின்றன.

வங்காலைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த ஆயி

...04 ஆம் பக்கம் பார்க்க

## கடற்படை விசாரணை!

கடந்த 10 ஆம் திகதி காரைநகரில் விடுதலைப் புலிகளின் சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப்படை நடத்திய அதிரடித் தாக்குதல் குறித்து விசாரணை நடத்தக் கடற்படைத் தலைமைப்பீடம் உத்தரவிட்டுள்ளது

விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டு கடற்படையின் விசாரணைக்குழுவொன்று காரைநகர் சென்றுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

விடுதலைப் புலிகள் எவ்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## பதுளை தேடுதலுக்கு பொலிஸ் அதிரடிப்படை

பதுளையில் தேடுதல் நடத்துவதற்கென பதுளைப் பொலிஸாருடன் பொலிஸ் அதிரடிப்படையினரும் இணைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை பதுளையில் நடைபெற்ற தேடுதல்களின் போது இராணுவம் ஈடுபடுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரும், பொலிஸ் அதிரடிப்படையினரும் பதுளை வீதிகள் தோறும்

...04 ஆம் பக்கம் பார்க்க

## மண்ணெண்ணெய் விநியோகம்

அச்சுவேலி ப. நோ. கூ. சங்கம் தனது கிளைகளூடாக பாவனையாளர்களுக்கு பங்கீட்டடிப்படையில் 2 லீற்றர் மண்ணெண்ணெயை லீற்றர் 38 ரூபா விதம் விநியோகம் செய்கின்றது. 43

## கொழும்பிலுள்ள யாழ்ப்பாணம்

தீவகப்பாடசாலைகளில் இருந்து இடம்பெயர்ந்து கொழும்பில் தற்காலிகமாக கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஜனவரி மாதச்சம்பளம் வழங்கப்படமாட்டாது என

## தீவக ஆசிரியர் வருகின்றனர்

கொழும்பில் உள்ள கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன் இவர்கள் தங்களை நிரந்தரமாக கொழும்

— 04 ஆம் பக்கம் பார்க்க

# 5000 பேருக்குப் புதிதாக நியமனம்!

## சுகாதார அமைச்சு இவ்வருட இறுதிக்குள் வழங்கும்

சுகாதார அமைச்சு நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் கடமைபுரியவும், கிராம மற்றும் நகர்ப்புறங்களில் வெளிக்கள சேவை புரிவதற்குமென விரைவில் 5000 பேரை நியமனம் செய்யத் திட்டமிட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக 1120 பெண் குடும்ப சுகாதாரத் தொண்டர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள்.

மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மருந்தாளர்கள், ஆய்வு கூட உதவியாளர்கள், பாடசாலை பற்சிகிச்சை வைத்தியர்கள், தாதிமார்கள் ஆகியோரும் இவ்வருட இறுதிக்குள் புதிதாக நியமனம் செய்யப்படவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்கள் தனித்தனியாகக் கோரப்படவுள்ளன.

# 80 மருத்துவ நிபுணர்களுக்கு வெளிநாட்டில் மேலதிகப் பயிற்சி!

எண்பது மருத்துவ நிபுணர்களுக்கு விரைவில் வெளிநாடுகளில் மேலதிக வைத்தியப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

அந்த வைத்திய நிபுணர்களுக்கு வெளிநாடுகளில் மேலதிகப் பயிற்சியை வழங்குவதற்கென அரசு ஒரு கோடி 80 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

மருத்துவ நிபுணத்துவ பரீட்சையை இவர்கள் ஏற்கனவே முடித்திருந்த போதிலும் நிதி ஒதுக்கீடு வழங்கப்படாததினால் வெளிநாட்டுப் பயிற்சி தாமதிக்கப்பட்டு வந்தது.

# முளைக்காய்ச்சல் நோயினால் கடந்தவருடம் 18 பேர் பலி!

கடந்த வருடம் இலங்கை முழுவதிலும் முளைக்காய்ச்சல் நோயினால் இறந்தோரின் தொகை பதினெட்டு என சுகாதாரப் பகுதி தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் மழை மிகக் குறைவாகப் பெய்ததினால் இலங்கையில் முளைக்காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டோரின் தொகை மிகக்குறைவாகவே இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பதக்கங்கள் பெற்றோருக்கு பணப்பரிசு, கௌரவிப்பு!

கடந்த 'சாவ்' போட்டிகளில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுக் கொடுத்த இலங்கை வீரர்களுக்கு அரசு பரிசு வழங்கி கௌரவித்துள்ளது.

இப்போட்டிகளில் தங்கப் பதக்கம் பெற்ற வீரர்களுக்கு அவர் பெற்ற ஒவ்வொரு பதக்கத்திற்கும் தலா 25 ஆயிரம் ரூபாப்படி வழங்கப்பட்டுள்ளது.

வெள்ளிப் பதக்கம், வெண்கலப் பதக்கம் என்பவற்றைப் பெற்றோருக்கு தலா 15 ஆயிரம், ஐயாயிரம் ரூபாப் படி வழங்கப்பட்டது.

இரட்டை ஆட்டங்களில் தங்கப் பதக்கம் பெற்றோருக்கு தலா, 12,500 ரூபாப் படி பரிசு வழங்கப்பட்டது.

இது தவிர தங்கப்பதக்கம் பெற்றோருக்கு தலா 1000 ரூபா பெறுமதியான தங்க நாணயமும் 250 ரூபா பெறுமதியான வெள்ளி நாணயமும் வழங்கப்பட்டன.

# தமிழ்மண்ணே தமிழனுக்குப் பாதுகாப்பானது தமிழ் திருநாளில் அதனை உணருவோம்

### கவிஞர் வாஞ்சி அறைகூவல்

"கர்நாடகத்தில் பாதிக்கப்பட்ட தமிழன் வேறெங்கும் ஓடவில்லை. தமிழ்நாட்டை நோக்கித் தான் ஓடி வருகின்றான். காரணம் தமிழன் வாழ்கின்ற இடத்தில் தான் தமிழனுக்குப் பாதுகாப்பு உண்டு. தமிழன் வாழ்கின்ற மண்தான் அவனது சொந்த மண்".

இவ்வாறு நாவற்குழி சாண்டியன் வீதியில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் உரையாற்றிய தமிழீழ மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரதிப் பொறுப்பாளர் கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், தமிழன் உலகில் எந்த மூலையில் அடிவாங்கினாலும் அது எமது இதயத்தில் வலியை ஏற்படுத்தவே செய்யும்.

இன்று உலகின் எல்லா இடங்களிலும் தமிழன் துயரங்களையும் துன்பங்களையும் சுமந்தபடியே வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

இன்று நம்மில் சிலர் இந்த மண்ணில் நடைபெறும் போராட்டத்திற்கு முகம் கொடுக்கப் பயந்து கொழும்புக்கு ஓடுகிறார்கள், கொழும்பு தமிழனின் மண்ணா? கொழும்பிலே கலவரமொன்று திடீரென்று வெடிக்குமானால் இங்கிருந்து கொழும்புக்குச் சென்று வாழும் தமிழர்களின் நிலை என்னவாகும்?

எதிரியை இம்மண்ணிலிருந்து அடித்து, விரட்டி. இம் மண்ணை விடுதலையடையச் செய்ய வேண்டும் என்பதில் இளைஞர் - யுவதிகள் மட்டுமல்ல; வயதானவர்களும் ஒன்று சேர்ந்து பாடுபட வேண்டும் எதிரி எம் மீது பாய்வதற்குத் தயார் நிலையில் உள்ளான். அவனது பாய்ச்சலை முறியடித்து, எமது தலைவர் பிரபாகரனின் வழியில் இணைந்து போராட ஒவ்வொருவரும் முன் வர வேண்டும். இத்திட சங்கற்பத்தை இப்பொங்கல் திருநாளில் மேலும் உறுதிப்படுத்த வேண்டும் என அங்கு மேலும் தெரிவித்தார் அவர்.

# ஸ்ரீலங்காவில்... வெளிநாட்டு இலட்சாதிபதிகள்!

நாற்பதுக்கும் அதிகமான வெளிநாட்டு இலட்சாதிபதிகள் உல்லாச சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்குத் தற்பொழுது வந்துள்ளனர்.

ஆடம்பரக் கப்பலொன்றில் இவர்கள் இங்கு வந்து சேர்ந்தனர்.

இந்த உலக லட்சாதிபதிகள் கடந்த ஆண்டு தமது உலக உல்லாச சுற்றுப் பயணத்தை ஆரம்பித்திருந்தனர்.

இலட்சாதிபதிகளின் வருகையால் இலங்கைக்கு 60 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகை வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கவுள்ளது.

## நெல்லியடியில், பொங்கல் விழா

நெல்லியடியிச் சனசமூகநிலையம் நடாத்தும்பொங்கல்விழா இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது

வடமாராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் அரசண்ணா விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

விழாவில் சிறப்பு நிகழ்ச்சிகளாக இன்னிசை வேந்தன் பொன். சுந்தரலிங்கத்தின் இசை அரங்கும், அகில இலங்கை கம்பன்கழக அமைப்பாளர் இ ஜெயராஜ் தலைமையில் 'பெண்மை ஆற்றலில் பெரிதும் உயர்ந்தவள் கண்ணகியா? சீதையா?' பட்டிமன்றமும் இடம் பெறும்.

# பிரிய செய்திகள்

## இன்று நல்லூரில்

நல்லூரில் ஜனசக்தி சனசமூக நிலையத்தில் இன்று காலை பொங்கல் விழா நடைபெறும்

பின்னர் தையல் நிலையத் திறப்பு விழாவும் பிற்பகல் சிறுவர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பாராட்டு விழாவும் இடம் பெறும் சிறப்பு நிகழ்ச்சியாக 'பாரதியார் மதவாதியா? தேசியவாதியா?' பட்டிமன்றமும் இடம் பெறும்.

## கூட்டுறவுச் சங்கக் கூட்டம்

கூட்டுறவுச் சங்கங்களினால் கப்பலில் தருவிக்கப்பட்ட பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யவும், கணக்குகளை செம்மைப்படுத்தவும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் சிட்டைகளையும், மற்றும் விவரங்களையும் உரிய படிவங்களுடன் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கத்திற்கு எடுத்து வருமாறு யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

## பாலர் வகுப்பு

சண்டிலிப்பாய் மணிமேகன் சனசமூக நிலையத்தினர் தைப்பூச நாளில் பாலர் வகுப்பு ஒன்றினை ஆரம்பிக்கவுள்ளனர்.

ஏற்கனவே இந்நிலையத்தில் தையற் பயிற்சி வகுப்பு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். (37)

## பொங்கல் கவியரங்கு

இன்று பகல் பத்துமணிக்கு ஊரெழு அருணோதயாக் கல்லூரியில் 'சங்கநாதம்' அமைப்பினர் கவியரங்கொன்று நடத்த உள்ளனர். இதற்கு கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள் தலைமை தாங்குவார்.

## போட்டிப் பரீட்சை

கிளிநொச்சி மாவட்டத்தில் எழுதுவினைஞர்களுக்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது

இப்போட்டிப் பரீட்சையில் தெரிவாகியவர்கள் இப்பகுதி அலுவலகங்களில் நியமிக்கப்படுபவரென செயலக வட்டாரங்கள் தெரிவித்தன (08)

# யாழ்பாடசாலைகளில் மூன்றாண்டு அபிவிருத்திக்கட்டம்!

### ஜனவரிமுதல் நடைமுறையில்

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகள் அனைத்திலும் இவ்வருடம் முதல் மூன்றாண்டு கல்வி அபிவிருத்தி ...

குறித்தகாலப்பகுதியில் மேற்கொள்ளவும் தேவைப்படும் நிதியினைத் தாமே திரட்டிக்கொள்ளவும் இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நடைமுறைப்படுத் தவுள்ளன

யாழ்ப்பாண மாநகரசபை

பொதுமக்களுக்கு ஓர் முக்கிய

அறிவித்தல்

உங்கள் அடுத்த உணவு வேளைக்கு ...

சிறுவிளம்பரம்

வைத்தியம்

# அறிவித்தல்

யாழ் நகர மக்கள் எதிர்நோக்கும் சுகாதாரப் பிரச்சனைகளைக் கருத்திற்கொண்டு பின்வரும் சுகாதார சீர்கேடுகளை விளைவிப்போர் மீது மாநகரசபையின் கட்டளைச் சட்டத்தின் கீழ் ரூபா 500/-க்கு மேற்படாத தண்டம் விதிக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

மாநகரசபையின் சுகாதார சேவை சிறப்புற நகர மக்கள் புரிந்துணர்வுடன் எமக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

01. கழிவுநீரோடும் வாய்க்கால்களுக்குள் குப்பைகளைப் போடுதல் அல்லது வாய்க்கால்களை மூடி கட்டிடங்களை நிர்மாணித்தல்

02. வீதிகளில் குப்பைகளைப் போடுதல்

03. வெற்றுக்காணிக்குள் அல்லது வளவுக்குள் செடிகள், பற்றைகளை வளரவிடுதல். நீர்தேங்கி நிற்கும் வகையில் பாவனைக்குதவாத பழைய பொருட்களைக் குவித்து வைத்திருத்தல். கிண்டு குழிகளை மூடாது வைத்திருத்தல்.

04. நாய், ஆடு, மாடு, பன்றி, போன்றவற்றை கட்டாக்காலியாக அலையவிடுதல், (பிடிக்கப்படும் கட்டாக்காலிகளைப் பராமரிக்கும் செலவும் தண்டத்துடன் சேர்த்து அறவிடப்படும்)

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
09. 01. 1992,

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்,

01022


உங்கள் அடுத்த
உணவு வேளைக்கு
விஜயம் செய்யுங்கள்

**ஜெசித்தாரா**
**உள்ளூர்**
**உணவகம்**

19/3 கொழும்புத்துறை-
சாலை,
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி

01028


## திருத்தம்

நேற்றைய முரசொலிப் பத்திரிகையின் 4 ஆம் பக்கத்தில் வெளி வந்த யாழ் பல்கலைக்கழகப் ''பதவி வெற்றிடம்'' விளம்பரத்தில் தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்) ரூபா 4 900/- மாதமொன்றுக்கு எனத் திருத்தி வாசிக்கவும். தவறுதலாக ரூபா 4,9000/- எனப் பிரசுரிக்கப்பட்டிருப்பதற்கு வருந்துகின்றோம்.

பாடசாலைகள் அனைத்திலும் இவ்வருடம் முதல் மூன்றாண்டு கல்வி அபிவிருத்தி அமுலாக்கல் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

இத்திட்டத்தினை அந்தந்த பாடசாலைகள் மட்டத்திலேயே தயாரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமது வளங்களைக் கொண்டு தேவைகளை நிறைவேற்றுதற்வதும் அவற்றைக் கொள்ளவும் தேவைப்படும் நிதியினைத் தாமே திரட்டிக் கொள்ளவும் இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

இதுவரை காலமும் கல்வித் திணைக்களம் வழங்கிய திட்டங்களை நடைமுறைப்படுத்திய பாடசாலைகள் இனிமேல் தமக்கான திட்டங்களைத் தாமே தயாரித்து கல்வித் திணைக்கள அனுமதியுடன்

# ரூபவாஹினி நிகழ்ச்சிகளை
## மும்மொழிகளில் 'கேட்கவும்' முடியும்

'ரூபவாஹினி' தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் விரும்பிய ஏதாவதொன்றில் விரும்பிக் கேட்கக் கூடிய வாய்ப்பு அடுத்த சில மாதங்களில் இடம்பெறவுள்ளது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை விரும்பிய மொழிகளில் கேட்டு மகிழக் கூடிய இந்த முறை யப்பான், ஜேர்மன் ஆகிய நாடுகளில் தற்பொழுது நடைமுறையில் உள்ளது.

இப்புதிய முறையின்படி நிகழ்ச்சியொன்றில உரையாடல், விளக்க உரை, மற்றும் குறிப்புகள் என்பன தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் முற்கூட்டியே ஒலிப்பதிவு செய்யப்படவுள்ளன.

## பொங்கல் விருது

இன்று பொங்கல் திருநாளை முன்னிட்டுத் தமிழக அரசு பல மாநிலப் பொலிஸாருக்கும், சிறைக்காவலர்களுக்கும், தீயணைக்கும் படையினருக்கும் விசேட விருதுகளை வழங்கவுள்ளது

இவ் விருதுக்கென 927 பொலிஸாரும், 100 தீயணைப் படையினரும், 20 சிறைக் காவலர்களும் மாநில அரசினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


## சிறுவிளம்பரம்

### வைத்தியம்

எனது ஆஸ்மா தொய்வு, (முட்டு) வைத்திய நிலையத்தில் பழைய நோயாளர்களைப் பார்வையிடுதல் மருந்து கொடுத்தல் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலையில் 9 மணியில் இருந்து 12 மணிவரையும் மாலையில் 4மணியில் இருந்து 6 மணி வரையும் நடைபெறும் மருந்துகள் பற்றாக்குறை காரணத்தால் புதிய நோயாளர்கள் பார்வையிடப்பட மாட்டார்கள். இவர்கள் பதிவு செய்யலாம். இப்படிக்கு டாக்டர் சுராஜ். சோமசுந்தரம் (ஆஸ்மா சிகிச்சை நிபுணர்) 33, நாலாம், குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் 01024

### வைத்தியம்

நாட்பட்ட நோய்களுக்கு ஹோமியோபதி சிகிச்சை நிரந்தர நிவாரணம் அளிக்கின்றது. டாக்டர் எம் வி. தில்லைசுந்தரன் 218/5 பலாலிவீதி, கந்தர்மடம். 01023



**அமைதி பொங்கிட அன்பும் பொங்கிட**
**என்றும் மங்களம் எங்கும் தங்கிட**
**வாழ்த்துகிறோம்.**

மில்க்வைற் உற்பத்தி என்று கேட்டு
வாங்கும்போது சுத்தமான வேப்பெண்ணெய்
வாங்குகிறீர்கள்.

மில்க்வைற் யாழ்ப்பாணம்

01032

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் பொங்கல் வந்தனங்கள்

கொடிகாமம் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம்!
மக்களுக்கு நியாயவிலையில் பொருட்களை கிடைக்கச்
செய்ய வழிவகுக்கின்றது.

**நியாய விலைக் கடை**

புகையிரத நிலைய முன்பாக

கொடிகாமம்

உங்களுக்குத் தேவையான சகல மனைப் பொருட்
களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள

**நியாய விலைக் கடை**

புகையிரத நிலைய முன்பாக
கொடிகாமம்.

நெல் மற்றும் உபதானியங்கள் கொள்வனவு
செய்வோர் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

**தேசிய உற்பத்திகளைப் பாவித்து**
**தமிழ் தேசியத்தைப் பாதுகாப்போம்**

விளம்பர அமைப்பு:

**சேனித் ஜோ. எகட்டன்**

01029

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் பொங்கல் வந்தனங்கள்


## தைப் பெண்ணே!

ஷெல்லடியும் சொல்லடியும் சென்றொழிய வேண்டும்
செத்து நிதம் அழிந்துவரும் நம்மினத்தைக் காக்க
நல்லவரம் தந்தெமது நெஞ்சுரத்தைக் கூட்ட
நல்லவளாம் தைப் பெண்ணே; நீ பிறக்கவேண்டும்

செங்கரும்பை கரத்தேந்தி சீர் நடனம் இடுவாய்
செந்தமிழர் வாழ்வினிக்கச் செய்துமனந் தொடுவாய்
இங்கிதப்பொன் முகச்சுடரால் துன்பமெலாம்
தொலைப்பாய்
எழில்விரப் புன்னகையால் எதிரிபலம் தடுப்பாய்

புத்தம் புதுமலர்கள் பூமியில் இனமுதிர்ந்து
புல்லரின் கால்களில் சிக்கி அழிவதேன்?
நித்தம் வீடுகளில் தாய்மாரின் கண்ணீர்ப் பூக்கள்
நிலமகளின் கழுத்தை நிறைப்பதேன் தைப்பெண்ணே?

கலைபொங்க வருமுன்னைக் கனிந்து வரவேற்போம்
கருணைக்கோர் சான்றுதரும் கனிமொழிகள்
ஏற்போம்
நிலைபொங்க மறைபொங்க நெறிபொங்க வேண்டும்
நின்வருகையால் தைப்பெண்ணே நிம்மதியே வேண்டும்!

★ மு. வே. யோ. வாஞ்சிநாதன்

## பொங்கல் மகிழ்ச்சி

வித்தை விளை நிலத்தில் வீசி, விளையும்
சத்தை உரமாக்கிச் சலியாது பாடுபடும்
மெத்தைச் சுகமறியா விவசாயி பொங்கலாம்
'தை' மகள் வரவால்
ஆனந்தம் கொள்வானே

★ வாசுகி சிவராமலிங்கம்

## பொங்கி வரும் மன அலைகள்

பொங்கிவரும் மனக் கவலை அலைகளாகி
போக்கிடமே தெரியாமல் அலைவுதந்தோ
இங்கிதங்கள் எல்லாமே எம்மைவிட்டு மறைந்தோடி
மனத்தை என்றும்
சங்கடத்தில் ஆழ்த்துகின்ற வேளை தன்னில்
சாந்தி பெற வழியின்றித் தவிக்கையிலே
பொங்கலிட்டுப் பூசை பண்ண மனமுமின்றி
போக்கிடங்கள் தெரியாமல் அலைகிறாரே.

அலைகின்ற மனதையொரு கயிற்றால் கட்டி
அனுதினம் அமைதிபெற வழியுங் காணோம்.
உலைகின்ற உள்ளமுடன் ஊர்கள் தோறும்
உருக்குலைந்த வடிவங்கள் எத்தனையோ?
கலைகின்ற கனவாகிக் கருத்தொன்றும்
கண்ணீரும் கம்பலையும் கலைந்தேயோட
மலைகின்ற வாழ்க்கைதனில் மனிதனுக்கு
மற்றுமொரு பொங்கலின்று வேண்டுமன்றோ

★ சிங்கையாழியான்


வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் பொங்கல் வந்தனங்கள்

நெல்லியடியில் உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றது

**நியாய விலைக் கடை**


சிறப்புக்கட்டுரை

# பொங்கல் விழா புத்தொளி பரப்பட்டும்!

பொங்கல் விழா ஒரு தமிழர் திருநாள் சாதி, சமய வேறுபாடுகள் இன்றித் தமிழர் எல்லோரும் கொண்டாடுகின்ற பொதுவிழா. இது ஒரு புனித விழாவுங்கூட. பொங்கல் விழா நடைபெறும் காலமும் ஓர் இன்பமான காலம்...

இத்தனை சிறப்பையும் தனக்குத்தந்த இயற்கையை உழவன் பொங்கல் திருநாளிலே வாழ்த்துகின்றான். வணங்குகின்றான். "ஞாயிறு போற்றுதும்", "மாமழை போற்றுதும்" "திங்களைப் போற்றுதும்" என்றார் இளங்கோவடிகள். பூமியிலே மாரி பெய்வதற்கும், பயிர் பூப்பதற்கும் காய்ப்பதற்கும் சூரியனே காரணமாக அமைகின்றான். காலநிலை, பருவநிலைகள் மாறுவதற்கு, சந்திரன் காரணமாக அமைகின்றான். இந்தச் சந்திரனுடைய இயக்கத்திற்கும், சூரியனே பொறுப்பாகிறான். எனவே எல்லாவளமையாலும் அந்தச் சூரியனுக்கு நன்றிக்கடன் செலுத்துகின்ற ஒரு விழாவே இந்தப் பொங்கல்விழா இதைப் பொங்கல் பண்டிகை என்றும் கூறுவர்.

வயலை உழுதுகளைத்த எருதுகள் வளமான உணவுண்டு வாட்டசாட்டமாக வளரும் காலம். பாலைப் பொழிந்துதரும் பசுக்களெல்லாம்-வள்ளல் பெரும் பசுக்களாகப் பால் சுரக்கும் காலம். உழவர் பெருமக்கள் உழைப்பால் வந்த களைப்புத் தீர உவகை கொண்டு அகத்தும் புறத்தும் மகிழும் காலம். அன்பையும் அறத்தையும் கைக்கொண்டு அவற்றைப் பண்பாயும் பயனாகவும் பெருக்கிப் பகுத்துண்டு பல்லுயிரோம்பும் காலம்.

இன்று எங்கள் உள்ளங்களிலே வேதனை பொங்குகிறது. விரக்தி பொங்குகிறது. கண்களிலே கண்ணீர் பொங்குகிறது. இல்லங்களிலே இல்லாமை பொங்குகிறது. எங்கள் மண்ணிலே பசியும், பிணியும் பொங்குகிறது. மனத்திலே பயம் பொங்குகிறது. ஏன் இந்த அவலம்.

செய்ய வேண்டியவற்றை, நாம் செய்ய வேண்டிய காலத்தில் செய்யவில்லை. பெறவேண்டியவற்றை நாம் பெறவேண்டிய காலத்தில் பெறவில்லை. உணர வேண்டியவற்றை நாம் உணர வேண்டிய காலத்தில் உணரவில்லை.

அந்நியர்களும், நம் எதிரிகளும் காட்டிய புதுமை மோகத்திலே, பதவி மோகத்திலே, பிரித்தாளும் தந்திரத்திலே நாம் எம்மைப் பறிகொடுத்துவிட்டோம், உத்தரவின்றி எமக்குள்ளே புகுந்த வேற்று இனத்தவரின் சிந்தனைகளும், சமய சித்தாந்தங்களும் எமைத் திசை திருப்பி எம்மைப் பூரண அடிமைகளாக்கி விட்டன

இப்போது ஒரு திருப்புமுனை ஏற்பட்டிருக்கிறது. புதுப் புனல் பொங்குகிறது. அதனால் புத்துணர்வு ஓங்குகிறது. இந்தப் புது வெள்ளப்புனலில் நாம் முழுக்காடி பழையன களைந்து

முருகனடியான்

புத்தூக்கம் பெறவேண்டியுள்ளது. அப்படி இல்லையெனில் எம்மை அவ்வெள்ளம் விழுங்கிவிடப் போகின்றது. இந்த வெள்ளத்திற்கெதிராக எதிர் நீச்சல் போட நினைப்பவர்கள் நிச்சயம் அடித்துச் செல்லப்படுவார்கள்.

இந்த விடுதலை வெள்ளம் கரைபுரண்டோடப் போகிறது. சூழல் மாசுகளையும், சாக்கடைகளும் சுத்தமாக்கப் போகிறது. கிருமிகளையும், நுளம்புகளையும் அழிக்கப்போகிறது. தமிழ் மண்ணின் வளத்தைப் பெருக்கப் போகிறது. இதுவரை பயன்படாமல கிடந்த தரிசு நிலங்களை- விளை நிலங்களாகப்

அனைவருக்கும் பொங்கல் வந்தனங்கள்

சுண்டிக்குளியில் மக்களின் நலன் கருதி
நடைபெறுகின்றது

## நியாய விலைச் சந்தை

உங்களுக்குத் தேவையான சகல வித வீட்டுப் பாவ
னைப் பொருள்களையும் ஒரே கூரையின் கீழ் நிதான
விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

## நியாய விலைச் சந்தை

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை,
19/3 கொழும்புத்துறைச்சாலை, சுண்டிக்குளி.

தேசிய உற்பத்திகளைப் பாவித்து
தமிழ் தேசியத்தைப் பாதுகாப்போம்

விளம்பர அமைப்பு:

செனித் ஜோ. எகட்டன்

01031



## நியாய விலைக் கடை

வங்கி அருகில், நெல்லியடி.

வடமராட்சி மக்களின் நன்மை கருதி அவர்களின்
தேவைகளைப் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றது

நெல்லியடி

## நியாய விலைக் கடை

மொத்த, சில்லறை விற்பனை நிலையம்.
நெல் மற்றும் உப தானியங்களைக் கொள்வனவு செய்
வோர் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ஒருமுறை விஜயம் செய்து உங்கள் சந்தேகத்தைப்
பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.

தேசிய உற்பத்திகளைப் பாவித்து
தமிழ் தேசியத்தைப் பாதுகாப்போம்

விளம்பர அமைப்பு:

செனித் ஜோ. எகட்டன்

01030


பயன்படாமல கிடந்த தரிசு நிலங்களை- விளை நிலங்களாகப் போகின்றது செயற்கைப்பசளைகளைக் கழுவி இயற்கை ஊடிடம் அளிக்கப்போகிறது எதிரிகளின் சுவடுகள் பதிந்த இடங்களைத் துடைத் தெறியப்போகின்றது எல்லோரும் எல்லாம் பெருஞ் செல்வமும் எய்தப் போகும்அமர நிலையை இந்த மண்ணில்நலவண்ணம்வாழும் உயர்நிலையை உருவாக்கும் ஊற்றுவாய்களைத் தோற்றுவிக்கப்போகின்றது. இந்த நறும்புனலாடுவதைற்கு ஆயத்தமாகுங்கள் இது ஓர் தீக்குளிப்பின் பின் பின்னர் நடக்கப்போகும் தீர்த்தக்குளிப்பேயாகும் அந்தத் தீர்த்தக்குளிப்பின் சுதந்திர தாயகத்திலே பொங்கலோ பொங்கல் என்று அடுத்த தைப்பொங்கலை அகமும் புறமும்குளிரப்பொங்குவோம் அப்போது அறியாமை அகன்று அறிவொளி பிரகாசிக்கும் மக்கள் சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம் என்ற அடிப்படையில் வாழ்வர். நிறைவைநோக்கி அவர்களுடைய உள்ளங்கள் பூரிக்கும்.

இடிபட்ட வீடுகளும், அடிபட்ட மக்களும், அல்லற்பட்டு ஆற்றாது ஓடிவந்து இடம் பெயர்ந்தோரும், பொன்னை இழந்து, பொருளை இழந்து, ஊனமுற்று வாழுவோரும், நம்முன்னே வாழ்ந்தாலும், சோர்ந்து விடாது தொழிற்படுவோம். வாழ்ந்தால் இந்த மண்ணில் சுதந்திரமாக வாழ்வோம். அன்றேல் வீழ்ந்தால் அனைவரும் ஒன்றாக வீழ்வோம். தை பிறந்தால் வழி பிறக்கும் என்று ஏங்கி நிற்கும் நெஞ்சங்களுக்கு ஒரு செய்தி "வழி தானாகப் பிறக்காது, பிறப்பிக்கவேண்டும் நெஞ்சில் உறுதியும், நேர்மைத்திறனும், வஞ்சனையில்லாச் செயலும் வலுவூட்டத் தமிழ் உணர்வும், தமிழ் இன உணர்வும் பொங்கி இந்தப் பொங்கல் விழா புதுத் தெம்பை ஊட்டட்டும். புத்தொளி பரப்பட்டும்."

# திருமலையில் சிங்களக் குடியேற்றம் திட்டம் குறித்து கொழும்பில் ஆலோசனை

திருகோணமலையில்பெரும் அபிவிருத்தி மற்றும் குடியேற்றத்திட்டங்களை அமுல் படுத்துவது குறித்து கொழும்பில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுமார் 4000 ஏக்கர் நிலம் திருமலையில் இதுவரை நில அளவையைப்பகுதியினரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தகவல் வெளியிட்ட திருகோணமலை அரச அதிபர் கொட்வல இது அகதிகளை மீளக்குடியமர்த்தவே திட்டமிடப்பட்டுள்ளது எனவும், இன்னமும் 10,346 பேரை குடியமர்த்த வேண்டியுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இதன் பொருட்டு இவ்வருடத்தினுள் 29 அகதி முகாம்கள் மூடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை நகரப் பகுதியிலும், மாவட்டத்தின் கரையோரம் முழுவதும் சிங்களவர்களை குடியேற்றுவதில் ஸ்ரீலங்கா அரசு தற்போது மும்முரம் காட்டி வருவதாக தமிழர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டு வருவது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

## அதிபர்கள் கூட்டம்

வட்டுக்கோட்டைக் கொத்தணிக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை 16ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. 18

## மோட்டார் சைக்கிள் விபத்து நேற்று இருவர் மரணம்

நேற்றுக்காலை எழுதுமட்டுவாழில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த தே. தம்பு (71) என்ற வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில்சேர்க்கப்பட்ட பின்னர் மரணமானார்.

ஒழுங்கையிலிருந்து பிரதான வீதிக்கு வந்து கொண்டிருக்கும் போதே எதிர்பாராமல் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல் காங்கேசன்துறை வீதி நாச்சிமார் கோயிலடியில் நடைபெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் சிவகுரு புங்குடுதீவு என்பவர் ஸ்தலத்தில் மரணமானார்.

நேற்றுமாலை யாழ் தட்டாதெருச்சந்தியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயங்களுக்குள்ளாகி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இருவாரங்களுக்கிடையில் யாழ் குடாவில 25க்கு மேற்பட்ட வாகன விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

இரு குழந்தைகள் ஐந்து பெண்கள் உட்படஏழும் காயங்கட்குள்ளாகி யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். 07

# எனது திட்டத்தை நரசிம்மராவ் வரவேற்கிறார் - தொண்டமான்

''சர்வகட்சி மாநாடும், பாராளுமன்றத் தெரிவுக் குழுவும் மாதங்களாக வருடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள் அவற்றுடன் என் திட்டத்தைக் கலக்கக்கூடாது'' இவ்வாறு அமைச்சர் தொண்டமான் புரண்ட்லைன் சஞ்சிகைக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்

எனது திட்டத்தைப் புலிகளும் மக்களும் எவ்வாறு நோக்குகின்றனர் என்பதில் தான் உண்மையான பதில் இருக்கிறது அவர்கள் சாதகமாகப் பதிலளிப்பார்களானால் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என அமைச்சர் குறிப்பிட்டார்

உங்களது முயற்சியை இந்தியா விரும்புமா எனக் கேட்டபோது, ''நிச்சயமாக இந்தியா மகிழ்ச்சியடைய வேண்டும் இதன் மூலம் சகல அகதிகளும் இலங்கை திரும்புவர் இதைவிட இந்தியா வேறு எதை விரும்பும் என தொண்டமான் பதிலளித்தார்

நரசிம்மராவுடன் பேசிய போது அவர் இது குறித்து என்ன கூறினார் எனக் கேட்டபோது, ''இலங்கை திரும்பும் அகதிகள் ஏன் மீண்டும் அகதிமுகாமுக்கு செல்லவேண்டும் நீங்கள் தானே புலிகளுடன்தொடர்பு கொண்டிருக்கிறீர்கள் அவர்களுடன் இதுபற்றி பேசலாமே என நரசிம்மராவ் என்னைப் பார்த்துக் கேட்டார் இதன் மூலம் இந்திய பிரதமரும் எனது தீர்வின் நாட்டம் கொண்டுள்ளார் என அறிய முடிகிறது'' என்றார் அமைச்சர் தொண்டமான்.

பதுளைப்பகுதியில் புலிகள் ஊடுருவிவிட்டதாக குற்றஞ்சாட்டப்படுகிறதே எனக் கேட்டபோது, ''இது ஒரு கனவு, சிலரது பகல் கனவு என்றார் அமைச்சர். (06)

# சமாதானச் சூழலை படைகளே தீர்மானிக்கும் - காமினி ஜெயசூரிய

''இராணுவம் இலங்கை முழுவதையும் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர வேண்டும்'' இதன் பின்னரே சமாதானம் குறித்து சிந்திக்க வேண்டும்?' என்கிறார் காமினி ஜெயசூரியா,

பேரினவாதிகளின் முக்கியமான இவர் கொழும்புப் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்,

சமாதானச் சூழலை அரசியல் வாதிகள் தீர்மானிக்க முடியாது படைகளே தீர்மானிக்க வேண்டும் என காமினி ஜெயசூரியா தெரிவித்தார். 06

## சென்னை விமான விபத்து எயர்லங்காவுக்கு இந்தியா உதவி

சென்னை விமான நிலையத்தில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற 'எயர்லங்கா' விமான அசம்பாவிதம் குறித்து விசாரணை நடத்த இந்திய அதிகாரிகளின் உதவியை எயர் லங்கா நிறுவனம் நாடியுள்ளது.

சம்பவ தினம் விமானத்தின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு, அதனால் ஏற்பட்ட தீ ஆகியன குறித்து இந்திய அதிகாரிகள் ஏற்கனவே விசாரணைகள் ஆரம்பித்துள்ளனர். விமானத் தகவல் சேகரிப்புக் கருவியான கறுப்புப்பெட்டியிலிருந்து தகவல்களைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விமானத்தில் பயணம் செய்துகொண்டிருந்த நிதியமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் விபத்தின் போது உயிர் தப்பியமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டு வருடங்களாக வயோதிபர் இல்லத்துக்கு மருந்து, உடுபுடைவை இல்லை

கைதடியில்உள்ளசாந்திநிலையம் அனாதை வயோதிபர் இல்லத்திற்கு கடந்த இரண்டு வருடங்களாக மருந்துகள், உடுபுடைவைகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இங்கு தங்கியுள்ள வயோதிபர்கள பெரிதும் கஷ்டங்களை எதிர் நோக்கி வருவதாகவும் தொண்டர் நிறுவனங்கள், தயாளமனமுடையவர்கள் இங்குள்ள வயோதிபர்களின் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு தம்மாலான உதவிகளைச் செய்யுமாறு நிர்வாகிகளும் வயோதிபர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த இல்லம் அரசின் ஆதரவுடன் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது 09

## காங்கிரஸ் உறுப்பினர் பதவி பிரியங்கா ஏற்க மறுப்பு

உத்தரப்பிரதேச இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினராக தாம் தெரிவு செய்யப்பட்டதை ராஜீவ் காந்தியின் புதல்வி செல்வி பிரியங்கா காந்தி ஏற்க மறுத்துவிட்டார்.

தாம் கல்வியைத் தொடர இருப்பதனால் இப்பதவியை ஏற்க முடியாதுள்ளதாக பிரியங்கா காங்கிரஸ் கட்சிக்கு அறிவித்துள்ளார்.

---

பதுளை—

தடைகளை ஏற்படுத்தி சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

---

காரைநகர்...

வாறு இப்பகுதிக்கு வந்தனர் என்று இதுவரை தெரியவரவில்லை எனவும் அநேகமாக சிறு படகுகள் மூலமாகவே புலிகள் கடல் வழியாக வந்திருக்கலாம் எனவும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி அப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது (06)

---

குருநகர்...

மடைந்தன.

குருநகரில் ஐந்து ஷெல்களும் நவாந்துறை கொட்டடியில் இரண்டு ஷெல்களும் வீழ்ந்து வெடித்தன.

நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் குருநகர்ப்பகுதி நோக்கி மண்டைதீவுப்பகுதி படையினர் இரு ஷெல்தாக்...

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வளலாய் பகுதி மக்களுக்கு உடுபுடைவைகள் அன்பளிப்பு

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் வளலாய் பகுதி மக்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தால் உடுபுடைவைகள் வழங்கப்பட்டன,

பெற்சீற், துவாய், சீலை, சறம் போன்றவை இவற்றுள் அடங்கும்

ஆவரங்கால் நடராஜராமலிங்க வித்தியாசாலை, மகாஜனா வித்தியாசாலை, புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, நீர்வேலி மாதா தேவாலயம் ஆகியவற்றில் தங்கியுள்ள அகதிகளுக்கே இவை வழங்கப்பட்டன, 06

---

கொழும்பிலுள்ள—

புக்கு இடமாற்றும் படிவிடுத்த விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இவர்களை உடனடியாக திவகப்பாடசாலைகளுக்கு

## தமிழ்க் காங்கிரஸ் ஆதரவு

தொண்டமானின் சமரசத் திட்டத்தை தமிழ்க் காங்கிரஸ் பூரணமாக ஆதரிக்கிறது என அதன் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார் (06)

## இந்தியாவின்

இருப்பதனால் இப்பதவியை

## மன்னார்...

இவரது சடலத்தை படையினர் மறுநாள மன்னார் ஆஸ்பத்திரியில் சேர்த்ததாகவும், மன்னார் நீதவான் முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்ற போது சுட்டசிப்பாய் சாட்சியமளித்ததாகவும் மேலும் தெரிவிக்க படுகிறது. 07

## மக்கள்...

கிரையாக்கப்படுகின்றன.

இதனால் அச்சமடைந்து மக்கள் வெளியேறிய கிராமங்களில் இராணுவத்தினர் முகாம்களை அமைக்கின்றனர். இதேபோன்ற ஓர் இராணுவ முகாம் நேற்று முன்தினம் மூதூர்பத்திரகாளி கோயில் பகுதியில் அமைக்கப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

வருகின்றனர்.

பதுளையில் பொலிஸாரின் பலம் மேலும் அதிகாரிக்கப் படுமா என்பது குறித்து இதுவரை எதுவும் தெரியவரவில்லை என கொழும்புச் சசெய்திகள் தெரிவித்தன. 06

## ஜீசர்நாய்க்...

ஓமந்தையிலிருந்து இவர்கள் வவுனியாவுக்கு தாமாகச் செல்ல வேண்டும் எனவும் செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன-

வவுனியாவில் இவர்கள் தங்கியிருந்து 14 நாள்களும் ஏ. ஆர். வி. தடுப்பூசி மருந்தினை ஏற்றவேணடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா ஆஸ்பத்திரியிலும் இம்மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுமானால் இவர்கள் கொழும்பு அல்லது அனுராதபுரம் சென்று ஏ. ஆர். வி. தடுப்பூசி மருந்தினை ஏற்ற வேண்டும் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. 07

## யாழ்...

சென்பற்றிக்ஸ் வீதி, பிரதான வீதி, கோவில் வீதி, றக்கா வீதி, கச்சேரி-நல்லூர் வீதி ஆகியவற்றின் ஊடாக செயலகத்தை வந்து அடைந்தது.

முதலில் கோவில் வீதியில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில மீனவர்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்படடது.

பின்னர் யாழ் செயலகத்தில் அரசாங்க அதிபரிடம் செயலகத்தில் வைத்து மகஜர் கையளிக்கப்பட்டது.

நிலத்திலவிழுந்து அரசாங்க அதிபர் க.மாணிக்கவாசகரின் கால்களைப் பிடித்து கண்ணீர் மல்கியவாறு படையினரால் பிடித்துவைக்கப் பட்டுள்ள தமது உறவினர், பிள்ளைகள் பதினெட்டுப் பேரையும் விடுவிக்குமாறு அவர்கள் கோரியது மக்கள் மனதை உருக்கியதைக் காணமுடிந்தது.

''எமது கடலில் எம்மைத் தடுக்க எவனுக்கு உரிமையுண்டு'' தடுப்பது தொடர்ந்தால் மக்கள் சக்தி வெடிக்கும் போன்ற கோஷங்கள் ஊர்வலத்தில் எழுப்பப்பட்டன. (25, 07, 06)

நோக்கி மண்டைதீவுப்பகுதி படையினர் இரு ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டனர்.

கடந்த ஐந்து நாள்களாக மண்டைதீவுப் படையினர் குருநகர்ப்பகுதி நோக்கி மேற்கொண்டுவரும் ஷெல்தாக்குதலினால் அப்பகுதி மக்கள் இரவு நேரத்தில் இடம் பெயர்ந்து பிற இடங்களுக்குச் சென்று வருகின்றனர். காலையில் திரும்பவும் வசிப்பிடங்களுக்கு சென்று வருகின்றனர். (07, 15)

## மாபெரும்...

பண்பாட்டுக்கழகம் வழங்கும் பொன் கணேசமூர்த்தியின் ,சந்தனக்காடு' நாடகம், சாந்தன் இசைக்குழுவினரின் 'போர்க்கால ராகங்கள்' இசை நிகழ்ச்சி என்பன நடைபெறவுள்ளன.

கலை நிகழ்ச்சியைக் கண்டு களிப்பதற்கான 10 ரூபா பெறுமதியான அன்பளிப்புச் சீட்டுக்களை மாவீரர் அரங்கிற்குச் செல்வதற்கான நுழைவாயில்களில் இன்று பிற்பகல் 5 மணியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் அறிவித்துள்ளனர்

இவர்களை உடனடியாக திவகப்பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

இதனால் இவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து திவகப் பாடசாலைகளில் தம்மை சேவையாற்ற அனுமதிக்குமாறு வேலணை கோட்டத்துக்கு விண்ணப்பித்து வருகின்றனர். 15

## மூளாய்...

ஐம்பதுக்கும் மேற்பட்டோர் ஒப்பமிட்டு யாழ் அரசாங்க அதிபருக்கு சமர்ப்பித்த மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் கண்மூடித்தனமான தாக்குதலை நிறுத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டுமென வற்புறுத்தும்படி கோரியுள்ள மேற்படி மகஜரின்பிரதி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் ஒப்படைக்கப் பட்டது:

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களை சர்வதேச அரங்கின் கவனத்திற்கு கொண்டுவருமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு சமர்ப்பித்த மகஜரின் பிரதியில் கோரப்பட்டுள்ளது.

## இந்தியாவில் கோக்ககோலா

அமெரிக்காவின் பிரபல குளிர்பான நிறுவனமான 'கொக்ககோலா' மீண்டும் இந்தியாவில் தனது கிளையை தொடங்குகிறது

## மீனவருக்கு—

டிக்கை காரணமாக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுடும் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியிருப்பது தெரிந்ததே (15)

## வங்காலைப்பகுதி...

ரம் குடும்பங்களுக்கு மேல் தாழ்வு பாடடில் தங்கியுள்ளனர்.

வடபகுதி இராணுவத் தளபதி கொப்பேகடுவ நேரில் வந்து இவர்களைப் போகுமாறு கேட்டதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

வங்காலைப் பகுதியில் இராணுவம் நிலைகொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது

1990 இல் விமான ஷெல் தாக்குதல்களால் வங்காலையில் பல வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது 07

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 15. 01. 1992இல் அச்சிட்டுவெளிவிடப்பெற்றது